# 4.4 திருவிவிலியமும் நமது வாழ்வும்



இருளை நாம் இருவேறு பொருளில் புரிந்து கொள்ளலாம். முதலாவது காலநிலையைக் குறிக்கும். இரண்டாவது மன இருளைக் குறிக்கும். காரிருளில் பாதை தெரியாமல் தட்டுத்தடுமாறி வெளிச்சத்தை எதிர்பார்த்வர்களாக நடக்க நேரிடும். அதேபோன்று சிறு பிள்ளைகளுக்கு இரவு நேரம் என்பது அச்சத்தைக் கொண்டு வரும் ஒன்றாகும்.

நமக்கு அச்சமூட்டும் வேறு பல காரணிகளும் உண்டு. எதிர்காலம் குறித்த ஓர் அச்சம் பெரியோருக்கு ஏற்படும். வெள்ளம், போர்ச்சூழல், ஆழிப்பேரலை, இன்னும் பல இயற்கை சீற்றங்கள் அத்துடன் வறுமை, பொருளாதார நெருக்கடி போன்றவை அச்சங்களை ஏற்படுத்தும். அதே வேளை சமயங்களுக்கு இடையே உரசல், இனமுறுகல், சாதி வேறுபாடு ஆகியன ஏற்படுவதற்குக் காரணம் மன இருளாகும்.

இவ்விரு நிலைகளிலும் நமது இறைப்பற்று மற்றும் வாழ்வு பெரிதும் ஆட்டம் காணும் போது, இறையூக்கத்தால் எழுதப்பட்ட திருவிவிலியம் நம்மைத் திடப்படுத்துகிறது.

நாம் கடவுளுடன் இணைந்து வாழ விரும்புகிறோம் அல்லவா? கடவுள் முன் நமது உடலையும் ஆன்மீக வாழ்வையும் முன்வைக்க வேண்டும். ஆண்டவர் இயேசு மாந்தரின் உடல் மற்றும் ஆன்மீக வாழ்வில் சமமான நாட்டம் கொண்டவராக இருந்தார். நோயாளிகளை நலம் பெறச் செய்தார். சக்கேயு போன்ற மக்கள் கடவுளுடன் முறிந்து போன உறவை சரி செய்ய உதவினார். ஐயாயிரம் பேருக்கு உணவூட்டி உடல் தேவைகளை நிறைவு செய்தார். அவர் தமது போதனைகளால் நாம் உள் ஒளி பெற்று, கடவுளுடன் உறவைப் புதுப்பித்துக் கொள்ள வழியமைத்தார்.

***இயேசு** :- தம் சீடரை நோக்கிக் கூறியது:* *“ஆகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உயிர்வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ, கவலை கொள்ளாதீர். உணவை விட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா?”*

*லூக்கா 12:22:23*



இலவச விநியோகத்திற்காக

நமது வாழ்க்கையைத் தெளிவான பாதையில் நடத்த உதவுவது திருவிவிலியம் ஆகும். பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் வழியாகவும் புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு மூலமும் கடவுளின் மன விருப்பம் நமக்கு தெளிவாகக் கிட்டியுள்ளது.



வாசிக்கவும்

எசாயா 48:17-18

இப் பகுதியிலிருந்து மூன்று கருத்துக்களைப் பட்டியலிடுக.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................




## திருவிவிலியம் ஆன்மீக ஊட்டம் தரும் உணவாகும்

நாம் உண்ணும் உணவு உடலுக்குள் சென்று சமிபாடு அடைந்த பின்பு அவை உடலுக்குத் தேவையான இயங்கு ஆற்றலை வழங்குகிறது. இதன் மூலம் உடல் வலுவடைந்து ஒவ்வொரு அவயமும் தமக்குரிய பணிகளை செவ்வையாகவும், சுறுசுறுப்பாகவும் செய்கிறது. அது போன்றே கடவுளுடைய வார்த்தைகள் நாம் இவ்வுலக வாழ்க்கையை வாழ வேண்டிய ஆற்றலை அளித்து வருகிறது.



இலவச விநியோகத்திற்காக

## ஆன்மீக வாழ்வின் படிவளர்ச்சி

ஒரு குழந்தை தவழும் நிலையில் பாலை மாத்திரமே உணவாக உட்கொள்கிறது. வளரும் போது திட உணவை பெற்றோர் கொடுக்கின்றனர். நன்கு வளர்ந்த பின் உடற்பயிற்சியும் அதற்கேற்ற உணவும் தேவைப்படுகின்றது.

இது போன்றே திருவிவிலியமும் நமது வாழ்வின் எச்சூழலுக்கும் பொருந்தக் கூடிய வார்த்தைகளைக் கொண்ட பெட்டகமாக விளங்குகின்றது. சிறு வயதில் திருவிவிலியத்தின் கதைகளை விரும்பிப் படிப்பதோடு வசனங்களை மனனஞ் செய்கிறோம். பெரியோரான நிலையில் திருவிவிலியத்தை முறைப்படி பகுதி பகுதியாக வாசித்து தியானித்து மன்றாடப் பழகுகிறோம். திருவிவிலிய ஆய்வுகள் சிறப்பான ஆன்மீக உணவாகும்.

நமது வாழ்வில் துன்பம், சோர்வு, சோதனை ஏற்படும் போது திருவிவிலியம் நமக்கு பக்கத்துணையாக இருக்கும்.

பின்வரும் சூழலில் திருவிவிலியம் உனக்கு கூறுவதை அறிவாயா?

| | | |
|---|---|---|
| நீ பயப்படும் போது | :- | நான் உன்னைத் தைரியப்படுத்துவேன்.<br>திருபாடல்கள் 91:6 தொடக்க நூல் 15:1 |
| நீ சோர்வடையும் போது | :- | நான் உனக்கு நம்பிக்கையளிப்பேன்<br>திருப்பாடல்கள் 26:1, லூக்கா 18:1 |
| நீ கவலையாய் இருக்கும் போது | :- | நான் உன்னைத் தேற்றுவேன்.<br>எசாயா 66:13, திருப்பாடல்கள் 71:21 |
| நீ குழப்பமடையும் போது | :- | நான் உனக்கு ஆலோசனை வழங்குவேன்.<br>திருப்பாடல் 119:24, யோசுவா 1:9 |
| நீ துயரப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் போது | :- | நான் உன் கண்ணீரைத் துடைப்பேன்<br>எசாயா 25:8 |
| நீ இருளின் பள்ளத்தாக்கின் ஊடாகச் செல்கையில் | :- | நானே உனக்கு வெளிச்சமாய் இருப்பேன்<br>திருப்பாடல் 119:15, திருபாடல் 23:4 |

**திருவிவிலியம் தரும் சிறப்புக் கட்டளை**

- உன் முழு இதயத்தோடும்,
- உன் முழு உள்ளத்தோடும்,
- உன் முழு ஆற்றலோடும்,
- உன் முழு மனத்தோடும்,
- உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக
- உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.


(லூக்கா 10:27)

மேற்காணும் வசனத்தை ஆழ்ந்து கவனிக்கும் போது கடவுளின் மீதும் ஏனைய மனிதர் மீதும் அன்பு கொள்வதற்கு நாம் உண்மையிலேயே அதிகமான ஆன்மீக ஊட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

**இந்த அன்பை வெளிப்படுத்தும் முறைகள்**

- பிறருடைய தன்மைகளை ஆராய்ந்தறிய முயலாது, எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உதவி செய்யப் பழகுதல்.
- கடவுள் நமக்கு மன்னித்தது போல நமக்கு எதிராக பிறர் செய்யும் தீமைகளை மன்னித்தல்.
- அனைத்து மனிதர்களின் நன்மை மற்றும் விடுதலை சார்பாகப் பணியாற்றுதல்.

திருவிவிலியத்தை நமது வாழ்வின் மையமாகக் கொள்வதன் மூலம் கடவுளின் விருப்பத்தை அறிந்து கொள்ள வாய்ப்பு கிட்டுகிறது.




என்னிடம் மன்றாடு; உனக்கு நான் செவி சாய்ப்பேன்: நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறை பொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்.
எரேமியா 33. 3



இலவச விநியோகத்திற்காக


மேற் காணும் வசனம், தியானம் மற்றும் மன்றாட்டு வாழ்க்கையை வலியுறுத்துகிறது. கடவுளிடம் நெருங்கியத் தொடர்பை ஏற்படுத்தும் தேவையை உணர்த்துகிறது. இடைவிடாது தியானித்து மன்றாடும் ஒருவர் தன்னில் தானே பெரும் மாற்றத்துக்கு உள்ளாகிறார்.



''நீ குழந்தை பருவம் முதல் திருமறை நூலைக் கற்று அறிந்திருக்கிறாய். அது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையால் உன்னை மீட்புக்கு வழிநடத்தும் ஞானத்தை அளிக்க வல்லது. மறை நூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்ப தற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது''.

**2திமொத்தேயு 3:15-16**

இவ்வகையில் திருவிவிலியம் ஒரு ஆசானைப் போன்றது. திருவிவிலியம் ஒரு நல்ல ஆலோசகராகவும் விளங்குகிறது. நம் வாழ்க்கைப் படகைக்கொண்டு நடத்தும் சுக்கான் போல பயன்படுகிறது.



திருவிவிலியம் நமது வாழ்க்கையில் நிறைகுறைகளைச், சீர்தூக்கி பார்க்கும் ஒரு கண்ணாடியைப் போன்றது. நமது எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டும் தொலைக்காட்டியைப் போன்றது.



இலவச விநியோகத்திற்காக

அத்துடன் திருவிவிலியம் உலகின் எல்லா பண்பாடு சார்ந்த மக்களுக்கும் அவரவர் மொழியில் பொருத்தமாக விளங்கக்கூடிய அதி உன்னத நூலாகும். நிலவு சூரியனில் ஒளி பெற்று இரவில் ஒளிர்வதை போன்று நாம் திருவிவிலியத்தின் உண்மைகள் மூலம் ஊட்டம் பெற்று பிறருக்கு ஒளியாக விளங்க உதவுவோம்.

**செயல்பாடு**

01 பின்வரும் ஒவ்வொரு வசனத்திலிருந்தும் நீர் பெறக்கூடிய ஆன்மீக வல்லமை எவையெனக் குறிப்பிடுக.

| வசனங்கள் | தரும் ஊட்டம் |
|---|---|
| 1. உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன். திருப்பாடல்கள் 119:11 | |
| 2. உண்மையின் பாதையை நான் தேர்ந்து கொண்டேன். உம் நீதி நெறிகளை என் கண்முன் நிறுத்தியுள்ளேன். திருப்பாடல்கள் 119:30 | |
| 3. உம் விதிமுறைகள் காட்டும் வழியை எனக்குக் கற்றுத்தாரும். திருப்பாடல்கள் 119:33. | |
| 4. உமது வாக்கில் என் காலடிகளை நிலைப்படுத்தும்! திருப்பாடல்கள் 119:133 | |
| 5. உம் ஒழுங்கு முறைகள் எக்காலமும் நீதியுள்ளவை திருப்பாடல்கள் 119:144 | |

02. உமது வாழ்க்கையில் ‘திரு வார்த்தை’ பாதைக்கு தீபமாக அமைந்த ஒரு நிகழ்வைப் பற்றி உமது நண்பருக்கு ஓர் கடிதம் எழுதுக.



இலவச விநியோகத்திற்காக